## <u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

## O.S.No.228/2013

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் நாள் பிரதிவாதியின் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தால் ஆணையிட்டு 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.பஷ்பராஜ், இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ராஜேந்திரன்** | தொழில் | |
| தந்தை பெயர் | அப்பாசாமி | கிராமம் | |
| வயது | | வட்டம் | |
| நேரம் | 10.55 | | |

**பி.வா த சா 1 குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

**A.** வழக்கு சொத்தை கனரா வங்கியில் அடமானம் வைத்தேன். அடமானம் வங்கியில் வைத்திருக்கும்பட்சத்தில் வில்லங்க சான்றிதழில் பதிவு செய்திருக்கப்படும் என்றால் அதை நான் மறுக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.த.சா.ஆ.2 ஆன வில்லங்கசான்றிதழ் அடமானத்திற்கான பதிவுகள் இல்லை என்றால் சரிதான். நான் இதற்கு முன்னர் தொடுத்த வழக்கின் எண் 836/1998 என்றால் சரிதான். 31.03.2003 அன்று அந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது 26.07.1990 என்ற செட்டில்மென்ட் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான அது முறையே பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**B.** 26.07.1990 தேதியிட்ட ஆவணத்தை மேற்சொன்ன வழக்கில் தாக்கல் செய்யாமல் தற்போது இவ்வழக்கில் தாக்கல் செய்ததற்கு என்ன காரணம் என்றால் சொத்து என்னுடையது என்பதால் தாக்கல் செய்தேன். அப்படி இருக்கும்பட்சத்தில் மேற்சொன்ன வழக்கை தாக்கல் செய்தபோது வழக்கு சொத்து என்னுடையது இல்லை என்று சொன்னால் அதை நான் மறுக்கிறேன். விவரங்கள் தெரியாததால் தாக்கல் செய்யவில்லை. அது என் சொத்து இல்லாததால் வாதி இவ்வழக்கை தொடுத்தபின் 26.07.1990ற்கான ஆவணத்தை நானே தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். வாதியை தொந்தரவு செய்யும் நோக்கத்துடன் வழக்கை நான் நடத்தி வருகிறேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். தொந்தரவு கொடுக்கும் பட்சத்தில் வாதி இவ்வழக்கு சொத்தைவிட்டு காலி செய்துவிடுவார் என்றால் அதை நான் மறுக்கிறேன்.

**C.** கருப்பாயி மற்றும் அன்னம்மாள் பெயருக்கு வழக்கு சொத்து எப்படி வந்தது என்றால் பெருமாள் நாயாக்கரின் பெயரில் இருந்து இவர்கள் பெயர்களுக்கு வந்தது. அதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் மேற்சொன்ன வழக்கிலோ இவ்வழக்கிலோ தாக்கல் செய்யவில்லை அதற்கு என்ன காரணம் என்றால் ஆவணம் என்வசம் இல்லை. அதற்கான மனு ஏதேனும் வருவாய் துறையிடம் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அந்த ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மனுவின் நகலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் விவரம் தெரியாததால் தாக்கல் செய்யவில்லை. சொத்து என்னுடையதாக இருந்திருந்தால் மேற்சொன்ன அனைத்து கேள்விகளுக்கும் ஆவணங்களின்

மூலம் பதில் அளித்திருந்திருப்பேன் இல்லாதபட்சத்தில்தான் நான் தொடுத்த வழக்கில் அதன் பேரில் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதை நான் மறுக்கிறேன். அந்த மேல்முறையீட்டு தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்யவில்லை என்றாலும் சரிதான். வழக்கு சொத்தில் உரிமையாளர் என்னு கூறும்பட்சத்தில் மேற்சொன்ன மேல்முறையீட்டை நடத்தியிருப்பேன் வாதியை அளக்கழிக்கும்நோக்குடன் இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் அதை நான் மறுக்கிறேன்.

**D.** பட்டா வாதியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதையடுத்து அதற்கான மனுவை டி.ஆர்.ஓ விடம் சமர்பித்தேனா என்றால் இல்லை. வழக்கின் சொத்தின் உரிமையாளராக இருந்திருந்தால் வழக்கின் தஸ்தாவதியை சரியாக குறிப்பிட்டு வழக்கை நடத்தியிருப்பேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். வாதியை தொந்தரவு செய்யும் நோக்குடன் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் அதை நான் மறுக்கிறேன்.

**(மற்ற சாட்சிகளை விசாரணை செய்ய பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

**Sd./-Saranya Selvam**
**Additional District Munsif,**
**Kancheepuram.**